# மேலை நாட்டாரது இடையூற்றல் தமிழரது நாகரிகம் நலிவுற்றமையும் அதன் மேம்பாட்டிற்கான மாற்று வழிகளும்.

வி. எம். பழநியப்பன்.

மேற்கத்திய நாகரிகத்தை மட்டுமே முழு அளவில் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன நம்முடைய இன்றைய வாழ்க்கை நெறிமுறைகள். உண்ணும் உணவானாலும் உறங்கும் சூழலானாலும் உடுத்தும் பாங்கானாலும், எண்ணும் எழுத்தானாலும், கருத்துரைக்கும் போக்கானாலும், எதனையும் மேலை நாட்டாரின் பாங்கிற்கு ஒப்பத்தான் நம்மால் செய்ய முடிகின்றது. அவ்வாறானால்தான் அவையனைத்தும் ஏற்றுக்கொள்ளவும் படுகின்றன.

உலக மக்களுக்கு ஏற்புடைய சிறந்த கருத்தொன்று எனக்குத் தோன்றியுள்ளதாகக் கொள்ளுவோம். இதனை உலக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில், மேலை நாட்டாரின் நெறிக்கு உகந்த முறையில் மட்டுமே இதனை நான் வெளிக்கொணர இயலும் என்றதொரு நிலைமை, சிறிதும் மாற்றப்பட முடியாத அளவுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை, வெள்ளையர் கீழ்த்திசைத்துறை நாடுகளைக் கைப்பற்றி நமக்கு ஒவ்வாத அவர்களது வாழ்க்கை முறைகளை, நம்மினத்து மக்களிடையே பரப்பி, அதற்கொரு மாயைமிகு தோற்றத்தையும் ஏற்படுத்தி, நம்மை முழுமையாக அடிமைப்படுத்தியமையால் ஏற்பட்ட விளைவேயாம்.

ஏறத்தாழ 450 ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ள ஐயாயிரத்திற்கும் மேலான ஆண்டுகாலத்தில் தமிழரது (அல்லது இந்தியரது) நாகரிகம் மிகச் சிறப்புடையதாக இருந்துள்ளது என்பதற்குக் கணக்கற்ற இலக்கியங்கள் சான்றாக உள்ளன. கோவில்களும், சிற்பங்களும், கல்வெட்டுக்களும், இன்னும் மிஞ்சியுள்ள இசை, நாட்டியம் போன்ற நுண் கலைகளும் அழிக்க முடியாதவாறு தமிழரிடையே வேரூன்றியுள்ளன. இவை யாவும் இந்த 450 ஆண்டுக்காலத்தில் எவ்வாறு சீர்குலைந்தன என்பதை நாம் அனைவரும் இப்போது உணர்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளோம். நம்முடைய ஒப்பற்ற கணக்கியலும் விண்ணியலும் முற்றாகவே சீரழிந்துவிட்டன.

இவை யாவும் எப்படிச் சீரழிந்தன என்று ஆய்வு செய்யத் தேவையில்லை. ஒதுக்கப்படும் எதுவுமே தானாக அழிவுறும் என்ற உலக நியதிக்கு ஏற்ப, பேணாமையால் அழிவுற்றவைதாம் இவை யாவும் என, சிந்திப்போரால் உணர இயலும். எனவே, அதனை விடுத்து, தமிழரின் நாகரிகம் வளர்ந்த விதம் குறித்து ஆய்ந்து உணருவோமானால், அவ்வறிவு நமது வருங்காலத்தைச் செம்மையானதாக்கப் பயன்படும் என்பதையே நமது சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.

அனைத்துத் துறைகளையும் ஒருங்கே ஒப்பு நோக்க இயலாது. எனவே, பழந்தமிழரது மருத்துவத் துறையின் தோற்றம் எவ்வாறிருந்திருக்க முடியும் என்பதையாவது நாம் ஆராய்ந்து உணர முயலலாம். ஐயாயிரம் அல்லது எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர். இவை எவ்வாறு தோன்றின? அல்லது, தோற்றுவிக்கப் பட்டன? மருத்துவம் தோன்றிய வரலாறு பற்றி இனிப் புதிதாக ஆராய வேண்டுவதில்லை. கற்காலத்து மனிதன், தன் உடம்பில் தோன்றும் பிணிகளை நீக்கி, நெடுங்காலம் உயிர் வாழ்வது எவ்வாறு என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான் என்று கொள்ளுவது தவறாகாது.

தவறான செடிகொடிகளை உண்ணும் ஒரு சிலர் இறந்துவிடுவதையும், மற்றும் சிலவற்றை உண்ணும்போது கிறுகிறுப்பு ஏற்படுவதையும், வேறு வகை உணவுகள் உடலுக்குத் தெம்பூட்டுவதையும் அன்று வாழ்ந்த மனிதனால் உணர முடிந்தது என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான்.

ஒருவன் வாழுங்காலத்தில் தான் உணர்ந்தறிந்த உண்மைகளைத் தன்னைச் சுற்றியுள் ளோர்க்கோ தன் குழந்தைகளிடத்தோ சொல்லி, அவர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுவது இயல்பானதே. இம்முறையில், நன்மை தரத்தக்க, துன்பங்களை நீக்கத்தக்க தாவரங்களையும் விலங்குகளையும் பற்றிய ஆய்வு அன்றைய மக்களிடையே சிறிதுசிறிதாக உருப் பெற்றிருக்க வேண்டும். வயதில் மூத்தோர் இளையோர்க்கு அறிவுறுத்தியிருப்பர்! இத்தகைய மருத்துவ அறிவு செவிவழிச் செய்திகளாக, "பாட்டிமார் வைத்தியமாக" கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரையிலுங்கூட நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

அவை இன்று என்னவாயின? இன்றைய பாட்டிமார்கள் சிறுவயதினராக இருந்த காலத்தில் (1950-களில்) செவிவழிச் செய்திகள் சரிவர எட்டாதவாறு மேலைநாட்டுக் கல்வியும் அது சார்ந்திருந்த நாகரிகமும் தடுத்து, அவர்களைத் தடுமாறச் செய்துவிட்டன எனும் கருத்தும் ஏற்புடையதாகத்தான் இருக்கமுடியும். இத்தகைய மேலைநாட்டு நாகரிகச் செருகலின் விளைவாக, இன்றைய பாட்டிமார்களுக்கு எவ்வித 'கைவைத்தியமும்' தெரியாமல், முழு அளவில் தமிழ் மருத்துவத்தை மறந்து நமக்குப் பொருந்தாத மேலைநாட்டு மருத்துவத்தை நாடி, அதனல் விளையும் துன்பங்களுக்கு உள்ளாகித் துன்புற்று அழியும் நிலைமையும் இன்று பரவலாகக் காணப்படும் ஒன்றுதான்!

மனிதர் பேசும் மொழிகள் வரம்புபெறத் தொடங்கிய காலத்திலேயே மருத்துவ அறிவும் வளரத் தொடங்கியிருக்க வேண்டுமெனக் கொள்ளலாம்.

சீனத்தில் சீன மருத்துவமும், இந்தியாவில் ஆயுர்வேத மருத்துவமும் ஏறத்தாழ ஒரே காலத்தில் (8000 ஆண்டுகளுக்கு முன்னர்) தோன்றியவை என இத்துறையில் ஆய்வுகள் நடத்தியுள்ள கண்ணுசாமிப் பிள்ளை (1981) போன்ருேர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

எழுத்துக்கள் வழி ஆய்ந்து அறிந்தவற்றை நிலைப்படுத்தும் ஆற்றல் மனிதற்குத் தோன்றிய காலத்திற்கு முன்னரே சித்தரது மருத்துவம் செம்மையடையத் தொடங்கியமையால், அவற்றை நினைவில் நிலைபெறத்தக்கவாறு கவிதைகளாகவும் பாக்களாகவும் இயற்றி, அவற்றைத் தமிழ் இலக்கியங்களாகவும் மருத்துவமாகவும் ஆக்கினர் அன்றைய மருத்துவர்கள். அது மட்டுமல்லாது, மருத்துவம் என்பது மனிதரது துயரைப் போக்குவதற்காக இறைவனல் தரப்பட்ட ஒரு வரம் என நம்பி, அதனைப் பணியாகக் கொள்ளுவோர், இறைவனுக்குச் செய்யும் தொண்டு எனக் கொண்டு, தவறேதும் நிகழாவண்ணம் செயலாற்றுவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். துன்புறும் மனிதரது துயரத்தைத் தமக்குச் சாதகமானதாகக் கொண்டு, அதன்வழி பொருளீட்டி இன்புறும் எளிதானதொரு வழி இதுவென யாருமே கொண்டிருந்தாரில்லை.

பொன்னையும் பொருளையும் நாடுவோர்க்கு மருத்துவத் தொழில் ஏற்புடையதல்ல என இருந்த சூழலோடு, ஒருவர் மருத்துவராவதற்கு ஆழ்ந்த கல்வியறிவும், கவிதை கற்று உணரும் ஆற்றலும் பெற்றவராக இருந்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அப்போது இருந்தது. இவற்றைப் பெற மிகக் கடுமையான உழைப்பும், முயற்சியும், தன்னம்பிக்கையும் தேவைப்பட்டிருக்க வேண்டும்தான்! இத்தகைய கடுமையான சூழலில்தான் மிகப்பெரும் மருத்துவப் புலவர்களான நகுலர், சாலி கோத்திரர், பராசரர் போன்ற மிகப் பெரும் பேரறிஞர்கள் தங்களது ஒப்பற்ற மருத்துவக் களஞ்சியங்களை உருவாக்கி இந்திய மக்களுக்கு வழங்கினர் (பகவன்தாஸ், 19??).

மனநோய் மருத்துவம், பிள்ளைப்பேறு மருத்துவம், நச்சுநீக்கி மருத்துவம், புலன்களுக்கு ரிய மருத்துவம் என்றவாறன பற்பல துறைகளாக ஆயுர்வேதம் திறம் பெற்றிருந்தது (ஆஞ்ச நேய மூர்த்தி & பாண்டேய், 1982). மனிதரது அனைத்து நோய்களுக்கும் மருத்துவங் கண்ட இவர்கள், தங்களது நுண்ணறிவால் விலங்கினங்களுக்குங் கூட மருத்துவங் கண்டனர். அசுவ ஆயுர்வேதம் எனக் குதிரைகளுக்கும், கஜ ஆயுர்வேதம் என யானைகளுக்கும், கோ ஆயுர்வேதம் என மாடுகளுக்கும், விருட்ச ஆயுர்வேதம் என தாவரங்களுக்குங் கூட

மருத்துவத்தைச் செம்மைப்படுத்தி, அவற்றைப் பற்பல வகைப் பாடல்களாக்கித் தந்துள்ளனர் (பகவன்தாஸ், 19??).

இந்தியாவில் ஆயுர்வேத மருத்துவத்தைத் தொடக்கியவராகத் தன்வந்திரி மகரிஷி கருதப்படுகிறுர். தமது அறிவையும், ஆற்றலேயும் ஆதிரையர் என்பார்க்குக் கற்றுவித்தார் எனவும், அந்த ஆதிரையர் சரக முனிவர்க்கு அறிவுறுத்திஞர் எனவும் கண்ணுசாமிப் பிள்ளே (1539) ஆராய்ந்துள்ளார்.

தன்வந்திரி முனிவரது மற்றெரு பெயர் தேவதாசன் என்பதாகும். இவர் 'அறமேகலா' எனும் மருத்துவ நூலே உருவாக்கிஞர். அதற்கும் பின்னர், அவரது மாணவரான சாரகர் என்பார் 'சாரகம்' என்ற தமது நூலே உருவாக்கிஞர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட சுசுருத்தர் என்பாரது ஆயுர்வேதக் களஞ்சியம் மருத்துவத் துறையுள் தலேசிறந்ததெனக் கணிக்கப்பட்டதாகும். இன்றைய மேலே நாட்டு அறுவை மருத்துவத் துறையில் 'பிளாஸ்டிக் சர்ஜரி' எனப்படும் முறைக்கேற்ப, 3000 ஆண்டுகளுக்கு முன்னதாக, புறங்கழுத்தின் மேற்புறத் தோலே உரித்து காதின் கீழ்புறத்திற்கு அறுவை மாற்றஞ் செய்தவர் அவர் எனவும் ஆய்வுவழி அறியப்பட்டுள்ளது (கண்ணுசாமிப் பிள்ளே, 1939). 'சுசுருத சம்ஹிதம்' என்பதும் 'அஷ்டாங்க ஹிருதயம்' என்பதும் இவர் இயற்றிய மருத்துவ நூல்களேயாம் (கண்ணுசாமிப்பிள்ளே, 1939). 'சாரங்க சம்ஹிதம்' என்பது மற்றெரு ஒப்பற்ற மருத்துவ நூலாகும். இவையெல்லாம் நீங்கலாக 18 தமிழ்ச் சித்தர்கள் வழங்கிய மிகவும் போற்றுதலுக்குரிய அரிய மருத்துவக் களஞ்சியங்கள், கவிதைகள் - பாடல்கள் உருவில் இயற்றப்பட்டவை பெரு வியப்பிற்கு உரிய ஒப்பற்ற நூல்களாகின்றன.

இன்றைய மனிதனுல் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவிற்குத் திறம் படைத்த இந்த மருத்துவக் களஞ்சியங்களுள் மிகப் பெரும்பாலானவை, கடந்த 450 ஆண்டுக் காலத்தில், மிகக் குறிப்பாக வெள்ளேயர் இந்தியரை அடிமைகளாக்கிய காலத்தில் அழிந்து விட்டன.

நோயாளியின் துன்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, மருத்துவர் செல்வவளம் மிகுந்த வாழ்க்கை பெறும் வழியைத் தருவதாக ஆங்கில மருத்துவம் அமைந்து விட்ட காரணத்தால், அதில் கவர்ச்சியும் இருந்து விட்டமையால், ஆயுர்வேத அல்லது சித்த மருத்துவம் சிறுமைப் படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டது.

கேட்பாரற்று தமிழ் நாட்டின் பற்பல கோவில்களின் கூடங்களில் கிடந்தமையால் கரையான் அரித்தும், மக்கியும் போன ஓலேச் சுவடிகள், மருத்துவக் களஞ்சியங்கள் வீணனதை எண்ணும்போது நெஞ்சு விக்கி, வெடித்துவிடும் போலிருக்கிறது. கண்கள் கலங்குகின்றன. ஆத்திரம் அடக்கமுடியாமல் பொங்குகின்றது. தமிழனின் இழிநிலே இனியா வது திருந்த வேண்டும் என இறைவனே வேண்டத் தோன்றுகிறது.

ஆங்கில மருத்துவத்தால் பெரும்பாலான நோய்களேக் குணப்படுத்த இயலவில்லே என்பதையும், ஆங்கில மருத்துவம், ஒருவருடைய உடல் துன்பத்தை அவர் உணரமுடியாமல் செய்வதில்தான் ஆற்றல் மிகுந்ததாக உள்ளது என்பதையும் உலக முழுமையிலுமுள்ள இன்றைய மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

ஆங்கிலேய நாகரிகத்திற்கு ஏற்ப வளர்ந்துள்ள அறிவியல் ஆராய்ச்சிகள் அனேத்தாலுங் கூட இன்றைய நுண் கிருமிகளால் ஏற்படும் 'ஏய்ட்ஸ்' போன்ற நோய்களேக் குணப்படுத்த இயலவில்லே என்பதை உணரும் மக்கள், ஆயுர்வேத-சித்த மருத்துவம் போன்றவற்றின் பயன்களேத் தேடி நாடத்தொடங்கியுள்ளனர். 'உலக உடல்நல நிறுவனம்' (World Health Organisation) ஆயுர்வேத-சித்த மருத்துவம் போன்ற நாட்டு மருத்துவத்தால் மனிதகுலம் காப்பாற்றப்பட முடியும் என நம்புகிறது. 'யாராவது ஒருவருக்கு மனித குலத்தைக் காக்கும் வழிமுறை தெரியுமாஞல் அவர் எங்களே நாடலாம் - நாங்கள் உலக முழுமைக்கும் அதனேப்

பரப்புவதோடு, அவர்க்கு உரிய வாய்ப்புக்களும் வளங்களும் கிடைக்கும் வழியை வகுத்துக் கொடுக்கிறேம்' என அழைப்பு விடுத்துக் கொண்டேயிருக்கிறுர்கள்.

கடந்த 450 ஆண்டுகளாக ஆங்கிலேய மாயையில் தன் நிலேயிழந்திருந்த தமிழனுக்கு இன்றைய சூழ்நிலே நல்லதொரு வாய்ப்பை வழங்குகிறது. சித்த மருத்துவத்தையே கலாச்சார மாகக் கொண்டுள்ள தனது வாழ்க்கை முறையை உலகிற்குப் பரப்பி, தன்னே மேம்படுத்திக் கொள்ளத் தக்கதொரு வாய்ப்பு இன்று உருவாகியுள்ளது.

கணவன் - மனேவி உறவிற்கு இலக்கணங் கற்பித்த 'காம சூத்திரத்தை'யும், உடல் இயக்கங்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தித் தன் கட்டுப்பாட்டிற்குள் அடக்கும் தன்மையை வழங்கும் 'குண்டலினி' யோகத்தையும், பலன் ஏதும் பெருத தமிழன் மேலே நாட்டார்க்குக் கொடுத்துவிட, அவர்கள் அதனே இப்போது நமக்கே விற்று, நம்மை மேலும் அடிமையாக்கும் நிலேமைதான் தொடர்ந்து காணப்படுகிறது.

இனியாவது ஒரு விதி செய்வோம். பரத நாட்டியத்தையும், பற்பல கலேகளேயும் நாமே பரப்புவோம் - பெருமைக்காக அல்லாது, வாழ்வு செம்மையுற, அவற்றைப் பொருளீட்டித்த ரும் தொழில்களாக்கிச் சிறப்படைவோம். எய்ட்ஸ்சுக்கு மருத்துவம் கண்டு, இழந்துவிட்ட வற்றை எல்லாம் மீட்டு, தமிழினத்தையே தலேநிமிர்ந்து தழைத் தோங்கச் செய்வோம்! தமிழன் யாருக்கும் குறைவானவனல்லன்! தமிழனின் அறிவாற்றல் ஒப்பற்றது. 450 ஆண்டுகளாக முடங்கிக் கிடந்தது போதும் - இனியாவது விழித்தெழுவோம்!

ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் நெறிமுறையும், இரு கரங்கூப்பி வணங்கி வரவேற் பதும், வாழ்த்துரைப்பதும், வாழையிலேயின் வழி வழங்கப்படும் உணவை கையினுல் உண்ணுவதும், போகணியில் நீரை வாயிற் படாதவாறு தூக்கிக் குடிப்பதும், வெளியிற் செல்லும்போது குத்தவைத்தவாறு ஒதுங்குவதும், எயிட்ஸ் நோய் பரவாமல் ஒருவர் தம்மைத் தற்காத்துக் கொள்ளத்தக்கவையாக சித்தமருத்துவ வழிகள் பயன்படுகின்றன. உயர்ந்த இப்பண்புகளே மறந்துவிட்ட நமக்கு இறைவன் எய்ட்ஸ் வழி நினேவூட்டுகிறுரோ? இறைவ னுக்கு நன்றி சொல்லும் வழியினேக் கண்டு, இனியாவது உயர்ந்த நிலேயில் வாழும் வழியினேக் காண்போமாக! ஒற்றுமையைச் சிதறடித்து, பிளவுபட்ட இந்தியரை ஆங்கிலேயர் அடிமையாக் கினர். இனியாவது ஒற்றுமையைப் பேணி அதன்வழி உயர்வோமாக!

## மேற்கோள் குறிப்புகள்


1. Anjneya Murthy and Panday (1982). **Ayurvedic cure for common diseases.** Orient Paper Backs -Vision Books, Delhi. 200 pp.

2. Bhagwan Dash (19??). **Ayurvedic cures for common diseases.** Hind Pocket Books, Delhi. 161 pp.

3. Hakim Mohammed Said, M. Ataur Rahman and Lily Anne D'silva - Eds. (1987). **Elements in health and disease.** Hamdard University Press, Pakistan, 628 pp.

4. Hans-Ulrich Rieker (1971). **The yoga of light.** Unwin Paperbacks, London. 203 pp.

5. கண்ணுசாமிப்பிள்ளே, சி. (1939). **சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் : மூல வர்க்கம்.** B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னே. 705 பக்கங்கள்

6. கண்ணுசாமிப்பிள்ளே, சி. (1981). **சிகிச்சாரத்ந தீபம்.** B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னே. 328 பக்கங்கள்